+1 வணிகவியல் முதல் இடைப்பருவத்தேர்வு ஜீலை-26

1.(அ) போக்குவரத்து
2.(இ) சிறப்புத் தொழில்
3.(அ) உற்பத்தித் தொழில்
4.(ஆ) வரையறாப் பொறுப்பு
5.(ஆ) கர்த்தா
6.(அ) ஒப்பந்தத்தால்
7.(இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி
8.(இ) அமைப்பு முறை ஏடு
9.(அ) ராபர்ட் ஓவென்
10(ஆ) iii i ii

ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10

11. பண்டமாற்று முறை: ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறையேப் பண்டமாற்று முறை எனலாம்.

12. பொருளாதார நடவடிக்கைகள்: இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.

13. வணிகத்தை வரையறுக்க: எவ்லின் தாமஸ் அவர்களின் கூற்றுப்படி "வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும், விற்றலும் முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றமும் கொண்டதே ஆகும்."

14. கூட்டுரு சாரா நிறுவனங்கள்: கூட்டுரு சாரா நிறுவனங்கள் சட்டப்படி பதிவு செய்ய வேண்டிய கட்டாயமில்லை. இதில் உரிமையும் மேலாண்மையும் ஒருவரையே சாரும். எகா:- **தனியாள் வணிகம், கூட்டாண்மை நிறுவனம், இந்துக் கூட்டுக் குடும்பம்.**

15. கர்த்தா இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்தி, மேலாண்மை செய்யும் குடும்ப தலைமை உறுப்பினர்க்கு "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று பெயர்.

16. பட்டய(அ) சாசன நிறுமம் ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின் படி இவை செயல்படும்.

17. இராக்டேல் முன்னோடிகள்: இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை இங்கிலாந்தில் 1844 ஆம் ஆண்டு 28 நெசவாளர் உறுப்பினர்களுடன் "ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி" (இராக்டேல் முன்னோடிகள் சங்கம்) என்ற பெயரில் தொடங்கினார்.

ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15

18. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
கொற்கை, சாலியூர், காயல்பட்டிணம், மருகாவூர்பட்டினம், குமரி

19. தொழில்:- இலாபம் ஈட்டும் நோக்குடன், பொருட்களையும், பணிகளையும் உற்பத்தி செய்வதும், விநியோகம் கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை வழக்கமாக மேற்கொள்வதும் தொழிலாகும்.
தொழிலின் நடவடிக்கைகள் என்பது:-
மூலப்பொருட்களை வாங்குவது
பொருட்களை உற்பத்தி செய்வது
நுகர்வோரிடம் பொருட்களை சென்றடையச் செய்வது.
சிறப்புத் தொழில்:- அந்தந்த துறையால், அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும்.
எகா:- வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள். சிறப்புத் தொழில் மேற்கொள்பவர்களை சிறப்புத் தொழிலாளர்கள் எனவும் அவர்கள் பெரும் வருவாய் சிறப்புத் தொழில் கட்டணம் எனவும் அழைக்கப்படும்.

20. பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்:-ஒரு மூலப் பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஆராய்ச்சித் தொழிற்சாலை ஆகும்.
எகா:- எண்ணெய் சுத்திகரிக்கும் தொழிற்சாலையில், கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை பிரித்தல்.
மரபுசார் உற்பத்தித் தொழில்:- நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் வளர்க்கப்படுகின்ற தொழிற்சாலையே மரபுசார் தொழிற்சாலை எனப்படும். **எகா:-** கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு

21. வரையறாப் பொறுப்பு: தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச்

சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே, அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது.

22. கூட்டாண்மை நிறுமனத்தில் குறைந்தபட்ச அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

குறைந்த பட்ச உறுப்பினர் எண்ணிக்கை 2 பேர். அதிக பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை:- 50 பேர்.

23. அயல் நாட்டு நிறுமம் என்றால் என்ன?

இந்தியாவிற்கு வெளியே வேறு நாடுகளில் பதிவு செய்யப்பட்டு, இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல் நாட்டு நிறுமம் எனப்படும். இந்தியாவின் சட்டங்கள் அவற்றிற்கு பொருந்தும் என்பதால், கீழ்க்கண்ட ஆவணங்களைக் கண்டிப்பாக நிறுமப் பதிவாளர்களிடம் 30 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும்.

அவையாவன:- சாசனத்தின் சான்றிதழ் நகல் அல்லது கூட்டுருவாக்கத்தின் சான்றிதழ் அல்லது அமைப்பு முறையேடு மற்றும் சங்க நடைமுறை வழிகள் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

நிறுமத்தின் பதிவு அலுவலகம் உள்ள இடம்.

இயக்குநர் மற்றும் செயலரின் பட்டியல்

இந்தியாவின் தலைமை வியாபார அலுவலகத்தின் முகவரி.

நிறுமத்தின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் வழங்கிய இந்திய குடிமகனின் பெயர் மற்றும் முகவரி.

24. இந்திய பன்னாட்டு நிறுவனத்திற்கு ஏதேனும் மூன்று உதாரணங்கள் தருக. மைக்ரோமேக்ஸ் இன்பர்மேட்டிக்ஸ், ஹீரோ மோட்டார் கார்பரேசன், பஜாஜ், பிரிட்டானியா, டிவிஎஸ், டாட்டா, இன்.'.போசிஸ்

அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 3X5=15

25.அ. வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக.

ஆள்சார் தடை:- பொருள்கள் தேவைப்படும் நபர்களையும், நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

இடத்தடை:- பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

காலத்தடை:- ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது.

இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத்தடை:- பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள் ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

நட்ட இடர்பாட்டுத்தடை:- ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

அறிவுசார் தடை:- சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இது அறிவுசார் தடை எனப்படும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

பண்டப்பரிமாற்றத் தடை:- பணம் பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவைகளையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

நிதித்தடை:- உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன

25.ஆ. கூட்டாண்மை கலைப்பின் வகைகள்:

கூட்டாண்மை கலைப்பு இரண்டு விதமாக நடைபெறுகிறது.

1. நிறுவன கலைப்பு 2. கூட்டாண்மை கலைப்பு ஆகும்.

அ. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு

ஆ. நீதிமன்றத்தால் கலைப்பு

அ. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு

1. கூட்டாளியின் உடன்பாட்டால்: அனைத்து கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் அல்லது கூட்டாளிகளிடையே ஏற்படும் உடன்பாட்டால், கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.

2. ஒருவர் தவிர அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை:- ஏதாவது ஒருவர் நொடிப்பு நிலை அடைந்தாலோ அல்லது அனைத்து கூட்டாளிகளும் நொடிப்பு நிலை அடைந்தாலோ நிறுவம் கலைப்பு எனப்படும்.

3. சட்டத்திற்கு புறம்பான செயலால்:- சட்டத்திற்கு புறம்பாக தொழிலில் ஈடுபட்டிருந்தால் தானாகவே நிறுவனம் கலைக்கப்படலாம்.

4. விருப்பமுறிக் கூட்டாண்மை அறிக்கையால் கலைப்பு:- ஏதாவது ஒரு கூட்டாளி, கடிதம் மூலம் அனைத்து கூட்டாளிகளுக்கும், தனது விருப்பமான கலைப்பை தெரிவித்தால் நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

5. சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு:-

ஒரு கூட்டாளி இறந்து விட்டால்

குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையாயின் அக்காலம் முடிவடைந்துவுடன்

குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே கூட்டாண்மை தொடங்கப்பட்டிருப்பின், அத்தொழில்கள் நிறைவு பெற்றவுடன்.

ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்துவிட்டால், கூட்டாண்மை கலைக்கப்படும்.

ஆ. நீதிமன்றத்தால் கலைப்பு:- நீதிமன்றத்தில் கூட்டாளி ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

1. கூட்டாளி பைத்திய நிலையானால்
2. நிலையான திறமையின்மை
3. கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக் கேடு
4. உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை
5. உரிமை மாற்றம்
6. தொடர் நட்டம்
7. நீதி நேர்மை அடிப்படையில்

நிறுவனத்தை கலைத்திட, போதிய அடிப்படையில் காரணம் உள்ளது என்று நீதிமன்றம் கருதினால், கூட்டாண்மைக் கலைக்கப்படலாம்.

கூட்டாண்மை கலைப்பு:- கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும். கூட்டாளியின் நொடிப்பு நிலை, விலகல், கூட்டாண்மைக் காலம் முடிவு முதலியவற்றால் கூட்டாண்மை கலைப்பு ஏற்படும். ஆனால், தொழில் கூட்டாண்மை கலைப்பிற்குப் பிறகும் தொடர்ந்து நடைபெறலாம். எகா:- A,B,C மூவரும் கூட்டாளிகள் இதில் A என்பவர் விலகிக் கொண்டாலும் Bயும் Cயும் சேர்ந்து கூட்டாண்மையைத் தொடர்ந்து நடத்த ஒப்புக் கொண்டால், தொழிலை நடத்தலாம்.

26 அ) அடி	உற்பத்தித் தொழில்	வணிகம்	வியாபாரம்
பொருள்	பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் பயனுள்ள பொருட்களை தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது.	பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கின்றது.	பொருட்கள் மற்றும் சேவைகள், கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது.
உள்ளடக்கம்	கச்சா பொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.	வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது.	பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது.
முதல்	அதிக முதலீடு தேவை	குறைந்தளவு முதலீடே தேவை	போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும், கடன் அளிக்கவும் தேவையான முதல் தேவை.
இடர்பாடு	அதிக இடர்பாடு கொண்டது	குறைவான இடர்பாட்டைக் கொண்டது.	குறைவான இடர்பாட்டைக் கொண்டது
பரிமாணம்	பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது.	பொருட்கள் மற்றும் சேவையில், தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது.	இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது.

26. ஆ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.

ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள் அதாவது ஓட்டுரிமை, பங்காதாயம், பங்கு முதலை திரும்பப் பெறுதல் போன்றவை.

பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.

பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்த அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.

பங்கு மாற்றம் குறித்த விதிகள்.

பங்காதாயம் அறிவித்தல்.

நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம்.

இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்.

கூட்டங்கள் நடத்துதல், பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்

நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்.

நிறுமத்தின் பொது முத்திரை.

நிறுமக் கலைப்புத் தொடர்பான நடைமுறைகள்.

27.அ. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை?

தனிநபர் உரிமை:- இது தனிநபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.

தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு:- தனது அறிவுத் திறன் மற்றும் பட்டறிவு மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.

வரையறாப் பொறுப்பு:- தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை:- நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால் அவரை மேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.

அரசு விதிமுறைகள் பின்பற்றாமை:- இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை:- தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் முதல் சிறிய அளவிலேயே இருக்கும் அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

27.ஆ. பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகள்:

குறைந்த பட்ச கூலி:- குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில் பொருட்களையும், சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க விலையில் நன்மைகளைப் பெறுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகைச் செய்யப்படுகிறது.

தரமான பொருட்கள்:-

வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாரளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும், சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

வாழ்க்கைத் தரம் உயர்கின்றது:- பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்:- இவை, தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும், பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

நாட்டின் செலவாணி செலுத்துநிலை வளர்ச்சி:- இவை, ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால், நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.